## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

ஸ்ரீ லங்கா யூத் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட் கம்பனியின் (''கம்பனி'') 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதி நிலைமை அறிக்கை, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றில் சேர்க்கப்பட்டுள்ள அளவுசார் உருப்படிகளை மாற்று முறைகள் மூலம் உறுதிப்படுத்தவோ அல்லது சரிபார்க்கவோ என்னால் முடியவில்லை. எனவே நிதி நிலைமை அறிக்கையை தயாரிக்கும் பெறுமதிகள் அல்லது உருப்படிகள், விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக ஏதேனும் சரிசெய்தல் செய்யப்பட வேண்டுமா என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு  இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனிஅதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள்

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01- நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் நியமத்திற்கு முரணாக மீளாய்வாண்டிற் குரிய பணிக்கொடை ஒதுக்கீட்டுப் பெறுமதியான ரூபா 1,263,640 ஊழியர் நலன் ஒதுக்கீட்டுக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையால் ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | 2022/2023 நிதி ஆண்டின் போது பணிக்கொடை ஒதுக்கீடுகள் ஊழியர் நலன் ஒதுக்கீட்டுக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 07 – நிதி மூலங்களை வெளிப்படுத்தும் நியமத்தின் பிரகாரம் பொறுப்புக்களுக்காக பிணை வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் ரூபா 1,595,964 பெறுமதியுடைய நிலையான வைப்புக்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அனுமதிப் பத்திரத்தைப் | எதிர்வரும் நிதி ஆணடின் போது பிணைக்கு வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பெற்றுக் கொள்வதற்காக பிணைக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்து வத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு செலுத்த வேண்டியவை | 1,341,156 | 0.00 | 1,341,156 | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இணக்கஞ் செய்யாத மீதிகளை இணக்கஞ்செய்து சரிசெய்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | சொத்துக்கள் | 219,486,188 | நிலையான சொத்துப் பதிவேடு, பொருள் மெய்மையாய்வு அறிக்கை, இருப்புக் கணிப்பீட்டு அறிக்கை மற்றும் பட்டோலை | கருத்து தெரிவிக்கப் படவில்லை. | கணக்காய்வை மேற்கொள்வதற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பொறுப்புக்கள் | 113,990,290 | பட்டோலை, மீதி உறுதிப்படுத்தல் மற்றும் ஏனைய எழுத்துமூல சான்றுகள் | மேற்படி | மேற்படி |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

| அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 - 07 வருடங்களுக்கிடையிலான காலம் முதல் அறவிட வேண்டியதாகக் காணப்படுகின்ற ரூபா 31,808,829 ஆன உள்ளக பெறவேண்டியவைகளான ஊழியர் கடன் ஏனைய சொத்துக்கள், வீட்டு வாடகை மற்றும் காப்புறுதி தவணை என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதி தொடர்பாக தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளக் கூடிய அளவில் போதியளவான சான்றுகள் காணப்படாமையினால் தொடர்ச்சியாக இந்த மீதிகள் நிதிக்கூற்றுக்களில் பேணிச்செல்லப்படுகின்றது. | அறவிட வேண்டிய மீதிகளை விரைவாக அறவிடல் வேண்டும். |

#### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற ரூபா 28,593,062 ஆன ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் ரூபா 5,486,564 இனங்காணப்படாத வைப்பு மீதி என்பவற்றை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதி தொடர்பாக தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளக் கூடிய அளவில் போதியளவான சான்றுகள் காணப்படாமையினால் தொடர்ச்சியாக இந்த மீதிகள் நிதிக்கூற்றுக்களில் பேணிச்செல்லப்படுகின்றது. | செலுத்த வேண்டிய மீதகளை விரைவாக தீரத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீரமானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 6.7 ஆம் பந்தி | நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்பு தொடர்பாக வருடாந்தம் சொத்துக்கள் மெய்மையாய்வு மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொண்டு பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் உரிய அறிக்கை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 15.52 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 3.89 மில்லியன் ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 19.41 மில்லியன் அதிகரிப்பு காணப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது பாதுகாப்பு சேவை வருமானம் உயர்வடைந்து சென்றமையாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களை கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்து அதிகரித்தல் அல்லது குறைவுகளின் பெறுமதி அந்த சதவீதத்துடன் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | 2022 மார்ச் 31 இல் உள்ளவாறு பெறுமதி (ரூபா மில்லியன்) | 2021 மார்ச் 31 இல் உள்ளவாறு பெறுமதி (ரூபா மில்லியன்) | வேறுபாடு சாதகம் / (பாதகம்) (ரூபா மில்லியன்) | சதவீதம் % |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| பாதுகாப்பு சேவை | 102.38 | 81.10 | 21.28 | 26 |
| சுத்திகரிப்பு சேவை | 22.36 | 30.72 | (8.36) | 27 |
| சிற்றுண்டிச்சாலை வருமானம் | 35.03 | 24.61 | 10.43 | 42 |
| அச்சிடல் வருமானம் | 7.07 | 6.06 | 1.01 | 16 |
| பாடநெறி வருமானம் | 18.10 | - | 18.10 | 100 |
| | | | | 100 |
| ஏனையவை | 13.37 | - | 13.37 | |
| **செலவினம்** | | | | |
| பாதுகாப்பு சேவை | 86.01 | 80.54 | (5.47) | 6.8 |
| சுத்திகரிப்பு சேவை | 17.76 | 22.25 | 4.50 | 20.2 |
| சிற்றுண்டிச்சாலை வருமானம் | 40.35 | 33.94 | (6.41) | 18.9 |
| அச்சிடல் செலவினம் | 9.43 | 10.46 | 1.03 | 9.9 |
| பாடநெறி வருமானம் | 10.75 | - | (10.75) | 100 |
| ஏனையவை | 18.60 | - | (18.60) | 100 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் போது கம்பனியால் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்று வருமான வழிகளான வெளிநாட்டு பிரிவு பாட நெறிகளை நடாத்துதல், கணனி பாடசாலையை நடாத்துதல் மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் மூலம் வருமானம் அதிகரித்துக்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் கம்பனியின் இலாப வீதம் யாவும் மறைப் பெறுமதியைக் கொண்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்து அந்த விகிதம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| இலாப விகிதம் | 2021/2022 வருடம் (சதவீதம்) | 2020/2021 வருடம் (சதவீதம்) |
|---|---|---|
| செயற்பாட்டு இலாப விகிதம் | 7.82 | (2.73) |
| தேறிய இலாப விகிதம் | 6.86 | (2.76) |
| சொத்துக்கள் நலன் விகிதம் | 6.79 | (2.05) |
| மூலதன விளைவு விகிதம் | 16.26 | (4.76) |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கம்பனியின் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 228 மில்லியனாக இருந்ததுடன் அந்த சொத்துக்களிலிருந்து உழைக்கப்பட்ட இலாபம் ரூபா 15 மில்லியன் மாத்திரம் ஆனமையால் சொத்துக்களின் நலன் விகிதத்தில் காணப்படுகின்ற சந்தை வட்டிப் பெறுமதியுடன் ஒப்பிடும் போது மிகவும் கீழ் மட்டப் பெறுமதியைக் கொண்டிருந்தது.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| | அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் குறித்துரைத்த திகதியில் செலுத்தாமையின் அடிப்படையில் மீளாய்வாண்டில் ரூபா 5,422,676 மிகைக் கட்டணம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | கம்பனியின் நிதி முகாமைத்துவத்தில் காணப்பட்ட நலிவின் அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதியம் குறித்துரைத்த திகதியில் செலுத்தாமையின் காரணமாக இவ்வாறு மிகைக் கட்டணம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தை கால ரீதியில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) முன்னைய ஆண்டின் போது உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட ரூபா 3,741,584 முற்பணத் தொகைக்காக பொருள் வழங்கப்படாதிருந்த போதிலும் இது வரை அந்தத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது கம்பனி மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட செயற் திட்டமாகும். இது தொடர்பாக தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தால் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. | பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங் கண்டு ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் சிற்றுண்டிச்சாலை, அச்சிடல் பிரிவு தொடர்ச்சியாக நட்டத்துடன் நடாத்திச் செல்லப்படுவதுடன் இந்த பிரிவுகள் மீளாய்வாண்டின் போதும் முறையே ரூபா 4,576,205 மற்றும் ரூபா 2,355,350 நட்டத்தைப் பெற்றிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது முறையே ரூபா 2,050,140 மற்றும் ரூபா 3,079,467 நட்டத்தை பெற்றிருந்தது. இந்த நிலைமையை இலாபகரமாக நிலைமைக்குக் கொண்டுவருதவதற்கு உயர் முகாமைத்துவம் கவனம் செலுத்தாதிருந்ததுடன் அதற்காக தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலைமையைக் குறைப்பதற்காக தற்போது முகாமைத்துவம் அவ்வப்போது சில வேலைத்திட்டங்களை தயாரிக்கின்றது. | கம்பனியின் வருமானத்தைக் கட்டியெழுப்புவதற்கு உயர் முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

**3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 3,912,788 கையிலுள்ள காசு மீதி காண்பிக்கப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திகதியான 2025 செப்டெம்பர் 17 வரையில் இந்த மீதியில் நாளது வரையாக்கப்பட்ட காசு அளவு பௌதீக ரீதியில் காணப்படாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. மேலும் இந்தக் காசு மீதி 2023, 2024 மற்றும் 2025 மார்ச் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 2,778,140, ரூபா 2,778,140, | இந்த மீதிக்குரிய பௌதீக காசின் அளவு காணப்படாதிருந்ததுடன் இந்தக் காசி மீதியைப் பயன்படுத்தி நிறுவனத்தில் கொள்வனவு செய்தல் மற்றும் அத்தியவசிய நடவடிக்கைகள் முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பான ஆவணங்கள் சில கிடைக்கப்பெற்றுள்ளதுடன் | முறையற்ற கொடுக்கல் வாங்கல்களின் மூலம் ஏற்பட்டிருந்த இழப்பை மதிப்பீடு செய்து அதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் ரூபா 2,778,140 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த மீதியும் பௌதீக ரீதியில் காணப்படாதிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக சட்ட ரீதியான மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்குமாறு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப் பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அந்த ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்துவதற்காக உள்ளக பரிசோதனையொன்று உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்காக கணக்காளர் ஒருவரை நியமிப்பதற்காக 2013 ஆம் ஆண்டில் இருந்து நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உதவிக் கணக்காளர் பதவியும் 2019 யூன் 03 ஆம் திகதி முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. கம்பனிக்காக நிரந்தர அடிப்படையில் கணக்காளரை சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்காமை, இறுதி நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு கால ரீதியில் சமர்ப்பிக்காமைக்கும் காரணமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கணக்காளர் பதவிக்காக ஆட்சேர்ப்பை மேற்கொள்ளல் தொடர்பாக பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் உரிய பதவிக்காக 2026.01.01 ஆம் திகதி புதிய உத்தியோகத்தரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிரந்தர அடிப்படையில் விரைவாக கணக்காளரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் பந்தி 3.1 இன் பிரகாரம் பதவி அணியினருக்காக (Cadre) திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இதுவரையான காலத்தில் பதவியணியினர் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் சேர்க்கப்பட்டிருந்தனர். | பதவியணியினருக்காக திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்று அதன் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் மேற் கொள்ளப்படல் வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் அரச கம்பனிகளில் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021/2022 கணக்காண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2025 ஒக்டோபர் 22 ஆம் திகதி அதாவது 03 வருடங்களும் 04 மாதங்களும் தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கம்பனியின் உயர் முகாமைத்துவத் தில் அரசியல் ரீதியான மாற்றங் களின் அடிப்படையில் பதவியணி யினரின் மாற்றங்களின் அடிப்படையிலும் இவ்வாறு நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தாமதமடைந்திருந்தது. | தாமதம் இன்றி உரிய அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூல் மற்றும் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி 4.4 இன் பிரகாரம் உள்ளக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | இதற்காக பணிப்பாளர் சபைக்கு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.3 பொதுமுயற்சிகள் குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2025 பெப்ரவரி 18 ஆம் திகதி மற்றும் 20 ஆம் திகதிகளிலும் மற்றும் 2025 மார்ச் 19 ஆம் திகதியிலும் நடைபெற்ற முறையே பொதுமுயற்சிகள் குழுவினதும் (COPE) மற்றும் அந்த குழுவின் உப குழு | | |

| | | | |
|---|---|---|---|
| | கலந்துரையாடல் குறிப்பின் பிரகாரமும் கம்பனியினால் நிறைவேற்றப்பட வேண்டிய பின்வரும் குழு பரிந்துரைகள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. | | |
| (i) | கம்பனியின் எதிர்கால இருப்புத் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு அதன் இருப்பின் தேவை மற்றும் அது இலங்கை யூத் சேர்விசஸ் (தனியார்) லிமிடட் கம்பனியின் கீழ் செயற்படுகின்றதன் தேவை தொடர்பாகவும், கம்பனியின் விஞ்ஞாபனங்களில் குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களை நிறைவேற்றும் வகையிலும் தேவையான நடவடிக்கை எடுத்தல். | தற்போது விஞ்ஞாபனங்களின் பிரகாரம் அமுல்படுத்துவதற்குத் தேவையான புதிய செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தற்போது காணப்படுகின்ற செயற்திட்டங்களை இலாப கரமான நிலைமைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றது. | பொதுமுயற்சிகள் குழுவின் பரிந்துரைகளை விரைவாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | கம்பனி ஸ்தாபிக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டு முதல் வருடாந்த அறிக்கை பராளுமன்றத்தில் சமர்பித்தல். | இதுவரை கம்பனியின் வருடாந்த அறிக்கை தயாரிக்கப்படாதிருந்த மையால் எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | அரசாங்கத்தின் கொள்கை தொடர்பான விளக்கமளித்து நாளதுவரையான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்து 03 மாதங்களுக்குள் உப குழுவிற்கு சமர்ப்பித்தல். | புதிய முகாமைத்துவத்தின் கீழ் புதிய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இணங்க புதிய கூட்டிணைந்த திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நாளதுவரையாக்கப் பட்ட கூட்டிணைந்த திட்டமொன்றைத் தயாரித்து உப செயற் குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும். |